(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.5/2016 |
| Deposition Of Witness for | : | PW6 |
| Name | : | **திருமதி.மலர்விழி** |
| Husband's Name | : | திரு.வேணுகோபால் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **26th September 2025.**

(1, 4, 7, 10 மற்றும் 11-ம் எதிரிகள் ஆஜர். எதிரிகள் 2, 3, 6, 8, 9 மற்றும் 12 ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது தமிழ்நாடு வனத்தோட்டகழகத்தில் காரைக்குடி மண்டல அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2002 முதல் 2007 வரை கல்லல் வனச்சரக அலுவலகத்தில்

இளநிலை உதவியாளராக பணியாற்றினேன். அப்போது என்னுடன் நைனார் முகமது மண்டல மேலாளராகவும், மனோரஞ்சிதகலைச்செல்வி கணக்காளராகவும், ரசியா பேகம் திட்டப்பிரிவு உதவியாளராகவும், புவனேஸ்வரி இதர பிரிவு இளநிலை உதவியாளராகவும், ஆரோக்கியம் மற்றும் சிதம்பரம் அலுவலக உதவியாளராகவும், கண்ணய்யன் என்பவர் இரவு காவலராகவும் பணிபுரிந்தார்கள்.

2. 26.08.2009 ல் இராமநாதபுரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்கள், சிவகங்கை லஞ்ச ஒழிப்பு அலுவலர்கள் மாலை 5.30 மணிக்கு சோதனை செய்தார்கள். அப்போது அலுவலகத்தில் மண்டல மேலாளர் திரு.நைனார் முகமது, கண்காணிப்பாளர் ஜெயச்சந்திரன், ரசியா பேகம், மனோரஞ்சித கலைச்செல்வி, சிதம்பரம், புவனேஸ்வரி மற்றும் நானும் அலுவலகத்தில் இருந்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் 01.04.2009 முதல் 30.09.2009 வரையுள்ள Cash Sheet மற்றும் Work Register, கல்லல் Range மற்றும் வவுச்சர்கள் முதல் மற்றும் முடிவு பட்டியல்கள், Petty Contract Register ஆகிய ஆவணங்களை போலிசாருக்கு யார் கொடுத்தது என்றால் நான் கொடுக்கவில்லை, Range–லிருந்து கொடுத்திருப்பார்கள். அதில் இருக்கும் விபரங்களை நான்

பார்வையிட்டேனா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு தெரியாது, போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

***(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரியும் குறுக்கு விசாரணை செய்யவும் அனுமதி கோரப்பட்டது. சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு குறுக்க விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டது. அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் கோரப்பட்டது.)***

<u>**1, 2, 6, 9, 11–ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

(மற்ற எதிரிகள் மேற்கண்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்கள்.)

1. எனது தந்தை வனத்தோட்ட கழகத்தில் என்ன நிலையில் பணிபுரிந்தார் என்றால் வனக்காப்பாளராக பணிபுரிந்து பணிகாலத்திலேயே இறந்துவிட்டார், அவரது பெயர் ராஜேந்திரன். எனது தந்தை பணிகாலத்தில் இறந்து விட்ட காரணத்தினால் கருணை அடிப்படையில் எனக்கு இளநிலை உதவியாளர் பதவி வழுங்கப்பட்டது என்றால் சரிதான். தமிழ்நாடு வனத்துறை என்பது தமிழ்நாடு வனத்தோட்ட கழகம் என்பது சரிதான். தமிழ்நாடு வனத்துறை என்பது அரசு துறையை சார்ந்தது என்றாலும்,

தமிழ்நாடு வனத்தோட்ட கழகம் என்பது ஒரு நிறுவனம் என்றால் சரிதான்.

2. தமிழ்நாடு வனத்தோட்ட கழகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற நபர்களுக்கு மிக மிக சொற்ப தொகைதான் ஓய்வூதியமாக வழங்கப்படும் என்றால் சரிதான். தமிழ்நாடு வனத்தோட்ட கழகத்தில் தைலமர கன்றுகளை நட்டு 4, 5 வருடங்களாக வளர்த்து மரமாக வளர்த்து அதில் இருந்த பல்புகளை எடுத்து பேப்பர் தயாரிக்கும் நிறுவனத்திற்கு வழங்குவதுதான் முதன்மையான பணி என்றால் சரிதான். மேலும் முந்திரி மரங்கள் வளர்த்து அதிலிருந்து முந்திரி கொட்டைகளை ஏலத்திற்கு விடும் பணியையும் செய்வார்கள் என்றால் சரிதான். தைல மரக்கன்றுகளின் வளர்ப்பு சம்பந்தமாக மேற்பார்வை செய்யும் அதிகாரம் 1ம் எதிரிக்கு உள்ளது என்றால் சரிதான்.

3. 1ம் எதிரி தைல மரக்கன்றுகள் நடப்பட்டது குறித்து 25 சதவீதம் நேரடியாக சென்று மேற்பார்வையிட்டால் போதுமானது என்றால் சரிதான். அதேபோல் மரங்கள் வளர்ந்திருப்பதை ஒன்று இரண்டு முறை சென்று பார்த்தால் போதும் என்றால் சரிதான். வனச்சரகருக்கு கீழே வனவர், வனக்காப்பாளர் மற்றும் வனக்காவலர் பணிபுரிவார்கள் என்றால் சரிதான். காரைக்குடி மண்டல அலுவலகத்தினை போன்று தமிழ்நாட்டில்

மொத்தம் 6 மண்டல அலுவலகங்கள் உள்ளது என்றால் சரிதான். இந்த தைல மரங்களை நட்டு உழவு பணி செய்யும் விபரம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சிறு குத்தகைதாரர்கள் பதிவு செய்ய வேண்டிய அவசியமும் கிடையாது அவர்களுக்கென ஏலம் நடத்துவதும் கிடையாது என்றால் சரிதான்.

4. நான் சாட்சி சொல்லும் வழக்கில் கடந்த 2005–ம் ஆண்டு நடப்பட்டு 5, 6 வருடங்களாக வளர்க்கப்பட்டு மரமாகி வெட்டப்பட்டு பல்புகள் எடுத்து கரூர் பேப்பர் தொழிற்சாலைக்கு அனுப்பப்பட்டு நிறைய லாபம் கிடைத்தது என்றால் சரிதான். தைல மர பணிகள் முடிந்தவுடன் முடிவு அறிக்கை யார் கொடுப்பார் என்றால் வனச்சரகர் கொடுப்பார். அதேபோல் அந்த அறிக்கையை கொடுத்த பிறகு மற்றொரு மண்டல அலுவலகத்திலிருந்து மண்டல மேலாளர் வந்து மேற்படி வேலை நடந்ததா என்று மேற்பார்வை செய்து அறிக்கை வழங்குவது வழக்கமாக என்றால் சரிதான். 2005–2009 ஆண்டுகளில் நடப்பட்ட தைல மரங்கள் குறித்து முடிவு அறிக்கை மற்றும் மற்றொரு மண்டல அலுவலகத்திலிருந்து மண்டல மேலாளர் வந்து மேற்படி வேலை நடந்ததா என்று மேற்பார்வை செய்து கூர்ந்தாய்வு அறிக்கை வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

5. 01.04.2009 முதல் 26.08.2009 வரை சில குழறுபடிகள் நடந்ததாக அரசு தரப்பில் சொல்லும் காலக்கட்டத்தில் தைல மரங்கள் முறைப்படிவளர்க்கப்பட்டு அவைகள் பின்பு வெட்டப்பட்டு பின்பு பல்புகள் எடுத்து அதன் மூலமாக லாபம் ஈட்டப்பட்டது என்றால் சரிதான். மேற்கண்ட காலக்கட்டத்தில் எந்த வித குழறுபடியும் நடக்கவில்லை, அரசுக்கு எவ்வித இழப்பீடும் ஏற்படவில்லை என்றால் சரிதான். அரசு தரப்பில் சொல்லப்படும் தவறான வவுச்சர்கள் மூலம் ரூ.4,84,444/— இழப்பீடு ஏற்பட்டதாக சொல்வது சரியல்ல என்றால் சரிதான்.

**(அரசு தரப்பில் குறுக்குவிசாரணை வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.)**

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2025.09.26 18:05:25 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.